திருப்பூர் மாவட்டம்

# திருப்பூர் தெற்கு வட்டம், கண்டியன் கோவில் ஆதிதிராவிடர் காலனி மற்றும் , காங்கேயம் வட்டம், முள்ளிபுரத்தில் ஆதிதிராவிடர் காலனியில் வசித்து வரும் ஆதிதிராவிடர் மக்களுக்கு கணிணியில் பதிவுகள் மேற்கொண்டு பட்டா வழங்குவது தொடர்பான பணிகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், கண்டியன் கோவில் ஆதிதிராவிடர் காலனி மற்றும் , காங்கேயம் வட்டம், முள்ளிபுரத்தில் ஆதிதிராவிடர் காலனியில் வசித்து வரும் ஆதிதிராவிடர் மக்களுக்கு கணிணியில் பதிவுகள் மேற்கொண்டு பட்டா வழங்குவது தொடர்பான பணிகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

திருப்பூர் தெற்கு வட்டம், கண்டியன் கோவில் ஆதிதிராவிடர் காலனியில், 25 நபர்களுக்கு வழங்கப்பட்ட பட்டாவில் குடியிருப்போர் மற்றும் காலியாக உள்ள வீட்டுமனைகள் கணக்கெடுப்பு பணியினை ஆய்வு மேற்கொண்டு முன்னதாக, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், நத்தக்காடையூர், முள்ளிபுரம் கிராமத்தில், ஆதிதிராவிடர் காலனியில் வசித்து வரும் ஆதிதிராவிடர் மக்களுக்கு கணிணியில் பதிவுகள் மேற்கொண்டு பட்டா வழங்குவது குறித்த ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், தாராபுரம் சார் ஆட்சியர் திரு.ஆனந்த் மோகன் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஜெகநாதன் அவர்கள், வட்டாட்சியர்கள் திருமதி.சிவகாமி, (காங்கயம்) திரு.கனகராஜ் (திருப்பூர் தெற்கு) தொடர்புடைய அலுவர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**